செய்தி வெளியீடு எண். 392

நாள் 15.05.2010

## செய்தி குறிப்பு

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.05.2010) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் 33 பேர்களுக்கு இளநிலை உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்**

அரசால் அறிவிக்கப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடையும் வகையில் அரசு இயந்திரத்தின் நிர்வாகத்திறனை மேம்படுத்திட அரசு பணிகளில் தேவையான அளவு புதிய பதவிகளை ஏற்படுத்தியும், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதிலும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.05.2010) தலைமைச் செயலகத்தில் வேலைவாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 33 பேர்களுக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் இளநிலை உதவியாளர்களுக்கான பணிநியமன ஆணையும், தனிப்பட்ட வாழ்த்து கடிதமும் வழங்கினார்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு கடந்த நான்காண்டுகளில், கருணை அடிப்படையிலும், வேலை வாய்ப்பகத்தின் மூலமும் உதவிப் பொறியாளர்கள், ஆய்வக தொழில் நுட்ப பணியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், வரைவாளர்கள், கனரக ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் களப்பணியாளர்கள், ஆகிய 387 பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியின் போது டாக்டர் நிரஞ்சன் மார்டி இ.ஆ.ப. முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப. மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் வாரிய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை